ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1986/62 - 2016 සැප්තැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2016.09.30
*1986/62 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபை**

இறப்பர் வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். எம். கோட்டபாய ஜெயரத்ன,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சு.

தொழிற் செயலகம்,
கொழும்பு 5,
2016, செத்தெம்பர் 26.

**அட்டவணை**

இறப்பர் வளர்த்தல் மற்றும் உற்பத்தி செய்தல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்ட முடிபுகள் 1949 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதிய 10047 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன் 2015, மே மாதம் 05 ஆந் திகதிய 1913/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இறப்பர் பயிரிடல் மற்றும் இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபை என மீளத் தாபிக்கப்பட்டதுடன், காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டனவுமான முடிபுகள் 2014, யூலை 07 ஆந் திகதிய 1870/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிபுகளான பகுதி III (அ) மற்றும் (ஆ) இற்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதிகளை இடுவதன் மூலம் இத்தால் மேலும் வேறுபடுத்தப்படுகின்றன.

பகுதி III மேலதிக நேர வீதம்

சாதாரணமான வேலை நாளின் மணித்தியாலங்களுக்கு மேலதிகமாகச் செய்யப்படும் ஒவ்வொரு வேலை மணித்தியாலம் தொடர்பில் ஆகக் குறைந்த மேலதிக நேர வீதமானது, அத்தகைய ஆகக் குறைந்த மணித்தியால வீதத்தின் 50% இனால் அதிகரிக்கப்பட்ட (ஆகக் குறைந்த நாளாந்த சம்பள வீதத்தை 8 ஆல் பிரித்து) ஆகக் குறைந்த மணித்தியால வீதமாக இருக்கும்.

10- 406


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.